இடங்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன. டில்லி, சட்டீஸ்கர், ஆந்திரா, பீகார் உள்ளிட்ட 15 மாநிலங்களில் ஓர் இடம்கூட கிடையாது. தமிழக மக்களின் வரிப் பணத்தில் உருவாக்கப்பட்ட இந்த உயர் சிறப்பு மருத்துவக் கல்விக் கட்டமைப்பை, மத்திய அரசு அபகரிப்பதை மாநில அரசு நிச்சயமாக அனுமதிக்கக் கூடாது. தமிழக சட்டமன்றப் பேரவையில் ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றி, தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழக அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவ முதுகலைப் பட்டம் மற்றும் பட்டயப் படிப்புகளில், அரசு மருத்துவமனைகளில், குறிப்பாக ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 50 சதவீத இட ஒதுக்கீடும் இன்று கேள்விக்குறியாக இருக்கிறது. தமிழக அரசால் தேர்வு செய்யப்பட்டவர்களுடைய பட்டியலை சென்னை உயர் நீதிமன்றம் இரத்து செய்துள்ள நிலையில், தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் நியாயமான தீர்ப்பு வர வேண்டுமென்று நாங்களும் விரும்புகிறோம்.

அதேபோல, எம்.பி.பி.எஸ். படிப்பிற்கு தமிழக அரசு கொண்டு வந்துள்ள 85 சதவீத இட ஒதுக்கீட்டிலும், சமூக நீதியைக் காப்பாற்றும் வகையில் இட ஒதுக்கீட்டுக் கொள்கை அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கை நடைபெற வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

4. ஆசிய தடகளப் போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழக வீரர்களுக்குப் பரிசுத் தொகை அறிவிப்பு

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புக் கவன ஈர்ப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளுக்கு பதிலளிப்பதற்கு முன்பாக, ஒரு நிமிடம் பெருமை வாய்ந்த நிகழ்ச்சியைப் பற்றி இந்தப் பேரவையில் நான் பதியவைக்க விரும்புகின்றேன். ஆசிய தடகளப் போட்டி நடந்து முடிந்துள்ளது. அதில், முதன்முதலாக இந்தியாவிற்கு அதிகமான

தங்கப் பதக்கங்கள் கிடைத்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தம் 45 நாடுகள் பங்கேற்ற அந்தப் போட்டியில் இந்தியா அதிகமான தங்கப் பதக்கங்களைப் பெற்றிருக்கிறது. அது பெருமைக்குரிய விஷயம். புதுக்கோட்டை மாவட்டம், செக்கூரணி என்ற சாதாரண கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜி. லட்சுமணன் என்ற இந்திய இராணுவத்தில் பணிபுரியக்கூடிய வீரர், 6–7–2017 அன்று 5,000 மீட்டர் தடகளப் போட்டியில் தங்கப் பதக்கமும், 9–7–2017 அன்று 10,000 மீட்டர் தடகளப் போட்டியில் தங்கப் பதக்கமும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆக 2 தங்கப் பதக்கங்களைப் பெற்று தமிழகத்திற்கு மிகப் பெரிய பெருமையை சேர்த்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்தவர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களும் தொலைபேசியில் அந்த வீரருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர். அவரும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் நேரில் வந்து சந்திப்பதாகத் தெரிவித்துள்ளார். இந்த மாமன்றத்தில் அந்த வீரருக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதை நான் பெருமையாகக் கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, அந்த வீரருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதாக உறுதியளித்துள்ளார்கள் என்பதையும் இப்பேரவையில் நான் பதிய வைக்க விரும்புகின்றேன்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

மருத்துவக் கல்லூரிகள், உயர் மருத்துவப் படிப்புகளில் மாணவர் சேர்க்கைக்கு ஒதுக்கப்பட்ட இட ஒதுக்கீடு இரத்து செய்யப்பட்டுள்ளது—தொடர்ச்சி

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி அவர்கள் ஒரே சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் 3 clarifications–ஐ கேட்டிருக்கிறார். Super Speciality Courses–ல் உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, 192 இடங்களுடன் இந்த ஆண்டுக்கான இடங்களையும் சேர்த்து 205 இடங்கள் உள்ளன. மாண்புமிகு

காரணத்தினால், உச்ச நீதிமன்றம் அந்த வழக்கில் உயர் நீதிமன்றத்தை நாடுமாறு தெரிவித்து அந்த வழக்கை dispose செய்திருக்கிறது.

முற்பகல் 11–35

மாநில அரசு உயர் நீதிமன்றத்திலும் தேவையான justification–ஐ, மாநில அரசினுடைய உரிமையை எடுத்துச் சொல்லி, நிச்சயமாக தொடர் நடவடிக்கைகளின் மூலமாக அதைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

4. ஆசிய தடகளப் போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழக வீரர்களுக்குப் பரிசுத் தொகை அறிவிப்பு—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) எப்படி, எந்த விதியில் கேட்கின்றீர்கள்? (குறுக்கீடு) எந்த விதி?*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தடகளப் போட்டியிலே சிறந்து விளங்கிய இராணுவ வீரராக இருக்கின்ற திரு. லட்சுமணன் புதுக்கோட்டையைச் சார்ந்தவர் என்று இங்கே குறிப்பிட்டார்கள். தாய் திருநாட்டை காப்பது மட்டுமல்ல, தாய் தமிழகத்திற்கு பெருமை சேர்த்திருக்கின்ற அந்த வீரருக்கு என்ன சிறப்புகளை அளிக்க வேண்டுமோ, அதை மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

5. கவன ஈர்ப்பு

கிருஷ்ணகிரி மாவட்டம், தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்*

முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இங்கே சில நேரங்களிலே, சபையிலே சிரிப்பொலியை எழுப்பி, நம்மையெல்லாம் மகிழ்ச்சியில் ஆழ்த்தி, எந்த நேரமும் நல்ல ஒத்துழைப்பு தந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் என்னுடைய அன்பான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

4. ஆசிய தடகளப் போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழக வீரர்களுக்குப் பரிசுத் தொகை அறிவிப்பு—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு மற்றும் இளைஞர் நல மேம்பாட்டில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடும் உயரிய நோக்கில், சர்வதேசத் தரத்தில் உட்கட்டமைப்பு வசதியுடன், தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் விளையாட்டு மைதானங்கள் மற்றும் உள் விளையாட்டு அரங்கங்கள் அமைத்தல், கிராம விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவித்தல், சர்வதேச மற்றும் தேசிய அளவில் பதக்கம் பெற்ற வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்குதல் போன்ற எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

புதுக்கோட்டையைச் சேர்ந்த வீரர் திரு. லட்சுமணன், 2017 ஆம் ஆண்டு ஒடிசா மாநிலம், புவனேஸ்வரில் சமீபத்தில் நடைபெற்ற ஆசிய தடகளப் போட்டியில் கலந்துகொண்டு, 5 ஆயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயம் மற்றும் 10 ஆயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயங்களில் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஆரோக்கிய ராஜ்

என்பவரும் இப்போட்டியில் கலந்துகொண்டு, 400 மீட்டர் தொடர் ஓட்டப் பந்தயத்தில் தங்கப் பதக்கமும் மற்றும் 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெள்ளிப் பதக்கமும் பெற்றுள்ளார். திரு. லட்சுமணன் மற்றும் திரு. ஆரோக்கிய ராஜ் ஆகியோர் இப்போட்டியில் கலந்துகொண்டு, பதக்கங்களை வென்று தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்ததற்கு எனது மனமார்ந்த பாராட்டுகளையும், (மேசையைத் தட்டும் ஒலி) இவர்கள் பல்வேறு பன்னாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு, மென்மேலும் பதக்கங்களை வெல்ல என்னுடைய வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு தங்கப் பதக்கங்களை வென்ற புதுக்கோட்டையைச் சேர்ந்த தடகள வீரர் திரு. லட்சுமணன் அவர்களுக்கு ரூ.20 இலட்சமும், (மேசையைத் தட்டும் ஒலி) தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்ற திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த தடகள வீரர் திரு. ஆரோக்கிய ராஜ் அவர்களுக்கு ரூ.15 இலட்சமும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிய தடகளப் போட்டியிலே அதி வேகமாக ஓடி, தங்கப் பதக்கத்தைப் பெற்ற திரு. லட்சுமணன் அவர்களுக்கும், திரு. ஆரோக்கிய ராஜ் அவர்களுக்கும், அதே வேகத்திலே வேகமாகச் செயல்படும் அரசு, நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு என்பதை நிரூபிக்கும் வகையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) வேகமாகச் செயல்படும் தமிழ்நாடு முதலமைச்சர், மரியாதைக்குரிய அருமை அண்ணன் அவர்கள், ஊக்கமுடன் ஓடிய வீரர்களுக்கு ஊக்கப் பரிசு வழங்கி மேலும் ஊக்கப்படுத்திய அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) புதுக்கோட்டை மாவட்ட மக்களின் சார்பாகவும், விளையாட்டுத் துறை சார்பாகவும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பரிந்துரை செய்த பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் நான் காலையில் இதுபற்றி எடுத்துச்சொன்னவுடனேயே, மின்னல் வேகத்தில் பணியாற்றுகிறது அம்மா அவர்களுடைய அரசு என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மனிதநேயத்தோடு திரு. லட்சுமணன் அவர்களுக்கு 20 இலட்சம் ரூபாய், திரு. ஆரோக்கிய ராஜ் அவர்களுக்கு 15 இலட்சம் ரூபாய் என்று ஊக்கப் பரிசினை அள்ளித் தந்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1–25

7. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 41—வருவாய்த் துறை

(ஆ) கோரிக்கை எண் 51—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.

திரு. விருகை V.N. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறு படிப்பது முக்கியமல்ல, வரலாறு படைக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) பிறர் தடம் பார்த்து நடப்பது முக்கியமல்ல, நாமும் தடம் பதிக்க வேண்டும். பிறர் உயரத்தை அண்ணார்ந்து பார்த்து ஆச்சரியப்படுவது முக்கியமல்ல, பிறர் பார்க்கும்படி வாழ்க்கையில் நாம் உயர வேண்டும். உயிரோடு வாழ்வது மட்டும் வாழ்க்கை அல்ல, உயர்வோடு வாழ வேண்டும் என்பதற்கேற்ப, கொடுத்து கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர் பொன்மனச் செம்மல் பாரத ரத்னா டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]